**செய்தி வெளியீடு எண்: 30/2022** **நாள்: 27.04.2022**

**பத்திரிக்கை செய்தி**

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கருணை அறக்கட்டளையுடன் இணைந்து கருணை வாரம் கொண்டாடப்படுகிறது

கருணை வாரத்தின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கருணை அறக்கட்டளையுடன் இணைந்து இன்று (27.04.2022) முதல் வெள்ளிக்கிழமை (29.04.2022) வரை ஆதரவற்றோர் காப்பக இல்லங்களைச் சேர்ந்த குழந்தைகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்கின்றனர்.

மரியலயா சென்னை தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் 52 குழந்தைகள் இன்று (27.04.2022) சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையம் வரை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர்.

கருணை வாரத்தைத் தொடர்ந்து, பல்வேறு ஆதரவற்றோர் காப்பக இல்லங்களைச் சேர்ந்த குழந்தைகள் நாளை (28.04.2022) மற்றும் வெள்ளிக்கிழமை (29.04.2022) மெட்ரோ இரயில் பயணத்தை மேற்கொள்வார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**